1995 ஏப்ரல் 17]

பெருமைப்படுத்துகின்ற வகையிலே வைக்கத்திலே சத்தியாகிரகப் போராட்டத்தை நடத்தி ஆதிதிராவிட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை தகர்த்தெறிந்த தந்தை பெரியாரை பெருமைப்படுத்த வேண்டும் என்பதற்காக முதல் முறையாக அண்டை மாநிலத்திலே தந்தை பெரியாருக்கு மட்டும்தான் நினைவகம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே அமைக்கப்பட்டது என்பதனை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவகத்திற்கு எவ்வளவு செலவழிக்கப்பட்டது. அந்த நினைவகத்தை பராமரிக்கும் பொறுப்பினை எந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழக அரசின் சார்பிலே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அற்புதமான நினைவகம் ஒன்று அங்கே அமைக்கப்பட்டுள்ளது. அதனுடைய பராமரிப்புச் செலவைக் கூட அங்குள்ள மாநிலம் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழக அரசுதான் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 314. திரு. கே. முனிவெங்கடப்பன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

314—

தேன்கனிக்கோட்டையில் நிலவள வங்கி தொடங்குதல்

***36189**-திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் நிலவள வங்கி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1995 ஏப்ரல் 17

(அ) தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் நிலவள வங்கி தொடங்கும் திட்டம் தற்போது அரசிடம் ஏதும் இல்லை.

(ஆ) எனவே, விடை இல்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் வளர்ந்து வருகின்ற ஒரு மாவட்டமாக மாறி வருகிறது. இந்த நிலையில் ஓசூர் வட்டத்திலிருந்து தேன்கனிக்கோட்டை வட்டத்தை பிரித்து பல ஆண்டுகள் ஆகின்றன. மேலும் தேன்கனிக்கோட்டை வட்டமானது பல மலைப்பகுதிகளையும் பல குக்கிராமங்களையும் கொண்டது. ஏறக்குறைய ஓசூர் நகரத்திலிருந்து 100 கிலோமீட்டருக்கு அப்பால் நாட்ராம்பள்ளி, தளி, ஒரிகம் போன்ற தூரமான பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் இருக்கின்ற கிராம மக்கள் இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே நிலவள வங்கிகள் மூலம் பல நல்ல திட்டங்களை செயல்படுத்தியும் கூட அந்தத் திட்டங்களை அவர்கள் பயன்படுத்திக்கொள்வதற்கு தெரிந்துக் கொள்வதற்குக்கூட வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, இப்போது இல்லை என்றாலும் வரும் ஆண்டிலாவது இதைப் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் தற்போது ஓசூரில் நிலவள வங்கி தேன்கனிக்கோட்டை உள்ளடங்கிய பல்வேறு கிராமங்களுக்கு தன்னுடைய தொண்டினை செய்துக்கொண்டு வருகிறார். இந்த ஓசூர் நிலவள வங்கி கடந்த 15 ஆண்டுகளாக நஷ்டத்திலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி இந்த வங்கி 27.85 இலட்சம் ரூபாய் நஷ்டத்திலே இருக்கிறது. எனவேதான் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நஷ்டத்திலே இயங்கி வருகின்ற இதுபோன்ற வங்கிகளை அபிவிருத்தி செயல் திட்டம் - டெவலப்பெண்ட் ஆக்ஷன் பிளான் என்கின்ற ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி நஷ்டத்தை குறைத்து நாளுக்கு நாள் அது இலாபத்திலே இயங்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு பெரிய செயல் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவில் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் இந்த ஓசூரில் இருக்கிற நிலவள வங்கி இலாபத்தில் இயங்கும். அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

திரு.கே.முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலுள்ள கிராம மக்கள் இன்றைக்கு நிலவள வங்கியின் மூலம் கொடுக்கப்படுகின்ற, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் கொடுக்கப்படுகின்ற நலத் திட்டங்களைத் தெரிந்து கொள்வதற்காவது அந்த கிளையினுடைய ஒரு பகுதியை ஒரு கிளையாக அந்த தேன்கனிக்கோட்டையில் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கியின் மூலமாக கொடுக்கப்படுகின்ற கடன்களை விவரித்து எடுத்துச் சொல்வதற்காக கூட்டுறவுத் துறையிலே அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் கிராமங்கள்தோறும் சென்று கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு பதில்களை அளித்து அவர்களுடைய ஐயங்களைத் தீர்த்து வைக்கிறார்கள். அந்த அளவில் இன்றைக்கும் ஓசூரில் உள்ள நிலவள வங்கியின் மூலமாக இந்த தேன்கனிக்கோட்டையில் இருக்கிற மக்கள் அவர்களை அணுகி நலத் திட்டங்களைப் பற்றி தெரிந்துகொள்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 315. டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை.

வினா எண் 316. டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு.கா. பூ. முனுசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

316—

பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***35728**—டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?